www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

TVL11T

திருநெல்வேலி மாவட்டம்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

வகுப்பு 11

கால அளவு: 3.00 மணிநேரம் பொதுத்தமிழ் மதிப்பெண்கள்: 90

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 14×1=14

1) தமிழின் முதல் பாவடிவ நாடகநூல்
அ) இரகசியவழி ஆ) மனோன்மணீயம்
இ) நூல்தொகை விளக்கம் ஈ) திருவிதாங்கூர் அரசர் வரலாறு

2) 'கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்
காலத்தால் சாகாததொல் கனிமங்கள்' - அடிமோனையைத் தேர்வு செய்க
அ) கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ) காலத்தால் - கனிமங்கள்
இ) கபாடபுரங்களை - காலத்தால் ஈ) காலத்தால் - சாகாத

3) தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13

4) மண்ணுக்கு வளம் சேர்ப்பன -
அ) மண்புழு ஆ) ஊடுபயிர்
இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

5) கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்
காரணம்: சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்
அ) கூற்று சரி; காரணம் தவறு ஆ) இரண்டும் சரி
இ) இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ) கூற்று தவறு; காரணம் சரி

6) காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார்
இ) முருகன் ஈ) பாரதியார்

7) 'கெடுக' - என்னும் சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) பெயரெச்சம் ஆ) வினையெச்சம்
இ) வியங்கோள் வினைமுற்று ஈ) பண்புத் தொகை

8) காட்டின் மூலவர் .............
அ) யானை ஆ) புலி இ) சிங்கம் ஈ) முயல்

9) கூற்று : கோடு என்பது தமிழ்ச்சொல் ஆகும்
காரணம் : கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை
பொருள்களும் உண்டு
அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்றும் சரி, விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் த

10) துன்பப்படுபவர் ...........
அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
இ) பொருளைக் காக்காதவர் ஈ) நாவைக் காக்காதவர்

11) ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்

12) சரியானதைத் தேர்ந்தெடுக்க.
அ) வரை - மலை ஆ) வதுவை - திருமணம்
இ) வாரணம் - யானை ஈ) புடவி - கடல்
அ) அ, ஆ, இ - சரி; ஈ-தவறு ஆ) ஆ, இ, ஈ - சரி; அ - தவறு
இ) அ, இ, ஈ - சரி; ஆ - தவறு ஈ) அ, ஆ, ஈ - சரி; இ - தவறு

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13) 'மு' என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; 'கவிதைக் கிரீடம்' என்று போற்றப்படுவது

அ) சிற்றிதழ் குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல் திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

14) பாரதியார் நடத்த விரும்பிய கருத்துப்படங்களை மட்டுமே கொண்ட இதழ் .........

அ) சுதேசமித்திரன் ஆ) குயில் இ) கர்மயோகி ஈ) சித்திராவளி

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** **3×2=6**

15) படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

16) 'பாயிரம்' பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?

17) தமிழர்கள் புகழ், பழி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாக புறநானூறு கூறுகிறது?

18) 'கற்றேன் என்பாய் கற்றாயா?' என்று அப்துல்ரகுமான் யாரிடம் எதற்குக் கேட்கிறார்?

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** **2×2=4**

19) நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாக தாகூர் எவற்றைக் கூறுகிறார்?

20) தமிழ்நாட்டின் மாநிலமரம் - சிறுகுறிப்பு வரைக.

21) ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

### பிரிவு - 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** **7×2=14**

22) மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?

23) **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**

அ) உண்டான் ஆ) மலிந்த

24) **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**

அ) புகழெனின் ஆ) புறந்தருதல்

25) ஆசிரியப்பாவிற்குரிய சீரும் தளையும் யாவை?

26) **பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

காலங்காத்தால எந்திரிச்சிப் படிச்சா ஒரு தெளிவு கெடைக்கும்

27) **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க**

எட்டுவரை

28) **கீழ்க்காணும் இரண்டனுக்கும் கலைச்சொல் தருக.**

அ) Passport ஆ) Equality

29) **மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

பொரி, பொறி

30) **பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக.**

நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன்

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

31) வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?

32) சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



33) 'ஏவல் மறுக்கும் சிறுவினை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

34) சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக்குறவஞ்சி கூறுவன யாவை?

## பிரிவு - 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2×4=8

35) ஜீவாவின் பேச்சுநடை குறித்து சுந்தரராமசுவாமி கூறுவன யாவை?

36) 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க

37) சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

38) வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

## பிரிவு - 3

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3×4=12

39) பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**(அல்லது)**

உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

40) **இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்கள் மட்டும்)**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட
நிச்சம் சுதந்திரம் அதுவேண்டும்

- நாமக்கல் கவிஞர்

41) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

42) 'அன்னை' (அல்லது) 'போதைப்பொருள் ஒழிப்பு' ஏதேனும் ஒரு தலைப்பில் எட்டு அடிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.

43) **தமிழாக்கம் தருக.**

1. An eye for an eye only ends up making the whole world blind.
2. Nobody can hurt me without my permission
3. A picture is worth a thousand words
4. Culture does not make people. People make culture.

43) **காது கேளாதவர்களுக்கான மாற்று வினா:**

**பத்தியினைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்**

'தமிழ்' என்ற சொல் தமிழர்களுக்கு இனிமையானது. 'இனிமையும் நீர்மையு தமிழெனல்' ஆகும் என்று பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. 'தமிழ்' என்ற சொல்ை இனிமை, பண்பாடு, அகப்பொருள் என்னும் பொருள்களிலும் வழங்கியுள்ளனர்.

'அதூஉம் சாலும் நற்றமிழ் முழுதறிதல்' என்ற புறநானூற்றுப் பாடலடியில் 'தமி எனும் சொல் மொழி, கவிதை என்பவற்றைத் தாண்டிப் 'பல்கலைப்புலமை' என் பொருளில் ஆளப்பட்டுள்ளது. 'தமிழ்கெழு கூடல்' என்றவிடத்திலும் 'கலைப்புல என்ற பொருளிலே ஆளப்பட்டுள்ளது. கம்பன் 'தமிழ் தழீஇய சாயலவர்' என்னு இடத்து, 'தமிழ்' என்பதற்கு அழகும் மென்மையும் பொருளாகின்றன.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



தேவாரம் போன்ற பக்தி இலக்கியங்களில் 'தமிழ்', பாட்டு என்னும் பொருளில் ஆளப்படுகிறது. ஞானசம்பந்தன் சொன்ன 'தமிழ் இவை பத்துமே', மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ் என்பன எடுத்துக்காட்டுகளாகும். முப்பது பாட்டுகளாலான திருப்பாவையை ஆண்டாள் 'தமிழ்மாலை' என்றே குறிப்பது இங்கு எண்ணத்தகும்.

**வினாக்கள்:**

1. தமிழ் என்னும் சொல்லுக்குரிய பல்வேறு பொருள்கள் யாவை?
2. பத்தியில் உள்ள அளபெடைகளைக் கண்டறிக
3. தமிழ் என்றவுடன் உங்கள் மனதில் தோன்றுவதை ஒரு வரியில் குறிப்பிடுக.
4. திருப்பாவைக்கு ஆண்டாள் குறிப்பிடும் பெயர் யாது?

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** **3×6=18**

44) அ) திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டுப் பாடல்கள் வழி இயற்கை வளங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கிக் கட்டுரையாக்குக.

45) அ) நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்த மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க

**(அல்லது)**

ஆ) 'கல்லும் கதை சொல்லும்' - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்கு பொருந்துவதை விளக்கு எழுதுக.

46) அ) வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக

**(அல்லது)**

ஆ) நர்த்தகி நடராஜின் நேர்காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி - V

47) **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.**

அ) 'நான் என்பாய் அது' - எனத் தொடங்கும் பாடலை எழுதுக. **1×4**

ஆ) 'இலன்' - என முடியும் குறளை எழுதுக. **1×2**

- - - - - - - -

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com